**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 248/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கருப்பையா | த–பெ | சீனிவாசன் |
| ஊர்: | : | மாத்தூர் | சமயம் | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டிரைவர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.07.2026**

----------------------------------------------------------------------------------------------------

**09.07.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) எதிரியின் கணவர் எனக்கு நீண்ட காலம் பழக்கம் என்றால் 15 வருடங்கள் பழக்கம். 15 வருடங்களாக அவர் என்னிடம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தாரா என்றால் 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வாங்கி கொடுப்பது வழக்கம். ஐயப்பன் அதுபோல் மற்ற நபர்களிடம் இருந்தும் கடன் பெற்றிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஐயப்பன் தற்கொலை செய்துகொண்டுதான் இறந்தார் என்றால் சரிதான். ஐயப்பன் அதிக கடன்கள் பெற்று கடன் தொல்லையால்தான் தற்கொலை செய்துகொண்டார் என்று FIR உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) ஐயப்பன் என்னிடம் வாங்கி கடனை சேர்த்துதான் தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இறந்த போன ஐயப்பனுக்கு அவரது மனைவியான எதிரி, அவரது 2 மகள்கள் மற்றும் பெற்றோர்கள் என அனைவரும் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். வீடு யூகோ வங்கியில் அடமானத்தில் இருந்தது என்றால் சரிதான். அதை அடைப்பதற்காக கடன் பெற்றிருந்தார். வீடு ரூ.14,40,000/– அடமானத்தில் இருந்தது என்றால் தொகை பற்றி குறிப்பாக எனக்கு தெரியாது. அதற்கான டியு செலுத்துவதற்காக என்னிடம் பணம் பெற்றார். காரைக்குடி லெட்சமி நகரில் உள்ள

ரகுபதியை தெரியுமா என்றால் தெரியும். ரகுபதியிடம் ஐயப்பன் கடன்பெற்றிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்துபோன ஐயப்பனின் கடன்கள் அனைத்தும் தானே திருப்பி செலுத்துவேன் என்று ஒப்புகை ஏதாவது எழுத்துபூர்வமாக எதிரி என்னிடம் கொடுத்தாரா என்றால் வாய் மொழியாக கூறினார்.

3) எதிரி என்னிடம் கடன் பெற்றதாக கூறும் 15.04.2024ல் எதிரியின் கணவர் வாங்கிய கடனும் திருப்பி செலுத்தாதபடி இருந்தது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ரூ.2,20,000/- மட்டும் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரியின் கணவர் பெற்ற கடனை அவரது வாரிசுதாரர்கள் திருப்பி செலுத்தவேண்டும் என்று கூறி உரிமையியல் வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஐயப்பன் எத்தனை நபர்களிடம் இருந்து கடன் பெற்றார் மற்றும் எவ்வளவு கடன் மற்றவர்களுக்கு செலுத்தவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஐயப்பன் தரவேண்டிய தொகையையும் சேர்த்துதான் வழக்கு காசோலையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி ரூ.1,47,500/- என்னிடம் கடனாகப்பெற்றார் என்றால் சரியல்ல. ரூ.77,000/- ரொக்கமாக கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எதிரியின் மகள் சுபா, மற்றும் இந்திரன் மகன் சங்கர் சாட்சியாக இருந்தார்கள். எதிரி திருப்பி செலுத்திய தொகையை புரோநோட்டில் வரவு வைத்துள்ளேனா என்றால் இல்லை, வங்கி மூலமாக செலுத்தியதால் வரவு வைக்கவில்லை. எதிரி எவ்வளவு தொகை திருப்பி கொடுத்துள்ளார் என்று தெரியுமா என்றால் வங்கி பரிவர்த்தனையை பார்த்தால் தெரியும் வங்கி பரிவர்த்தனையை தாக்கல்செ சய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி ரூ.1,47,500/- தொகையை திருப்பிசெலுத்திவிட்டார் என்பது தெரியவரும் என்பதால்தான் நான் வங்கி பரிவர்த்தனையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தேவைப்பட்டால் தாக்கல் செய்யதயாராக இருக்கிறேன். புரோநோட் மற்றும் காசோலையை யார் பூர்த்தி செய்து கொடுத்தார்கள் என்றால் புரோநோட் நிரப்பியவர் சங்கர், காசோலையை நிரப்பியபடிதான் எதிரி எனக்கு கொடுத்தார்.

4) எதிரி ரூ.1,47,500/- கடனுக்காக எதிரி கையொப்பம் செய்து நிரப்பாமல் செய்து கொடுத்த காசோலையை நான்தான் பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் பெற்ற கடனுக்கு சட்ட மீறுதலாக எதிரி மீது தற்போதைய வழக்கு பொய்யாக

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை அச்சுருத்தி மிரட்டி பணம் பறிப்பதற்காக காசோலையை பெற்றேன் என்றாலும் எதிரி காசோலை தொகையை கொடுக்க சட்டப்படி கடமைபட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல. நான் மிரட்டவில்லை. எதிரியின் கணவரின் சொத்து மதிப்புக்கான தொகையை யூகோ வங்கியிலேயே கடன் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலைக்கு சட்டப்படியான செல்லும் தன்மை இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.07.09 16:13:15 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.